## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# 5 ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் 4,29,394 வீடுகள்!

## வெற்றிப் பாதையில் முத்திரை பதிக்கும் ‘திராவிட மாடல்’ ஆட்சி!

சென்னை, மார்ச் 10 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் ஏழைகளுக்காக 4,29,394 வீடுகள்! ரூ. 482 கோடியில் ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளில் 5,281கட்டமைப்புகள் மேம்பாடு! 25.56 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு இலவச வீடு மனை பட்டா! என பல்வேறு வெற்றிப் பாதையில் முத்திரை பதிக்கும் எல்லார்க்கும் எல்லாம் என்னும் தத்துவத்திற்கேற்ப திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தென்கடல் வளாகம் பொதுமை இன்றி வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும் நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான் கடுமா பார்க்கும் கல்லா ஒருவருக்கும் உண்பது நாழி உடுப்பது இரண்டே பிறவும் எல்லாம் ஓரோக் கும்மே! என்று புறநானூறு 189 ஆம் பாடல் சொல்கிறது. அதாவது அரசன் ஆயினும், ஆண்டி ஆயினும் அனைவரும் உண்பது ஒரு நாழி அளவுள்ள உணவே. அவர்களுக்கு இடுப்பில் உடுக்கும் துணியும், உடம்பின் மேல் அணியும் துணியும் என இரண்டு துணிகள்தான் தேவை; இதுபோல் பிற அனைத்தும் எல்லோர்க்கும் ஒரே அளவில்தான் தேவைப்படும் என்கிறது இந்த புறநானூற்றுப் பாடல் இவற்றுடன் எல்லோரும் மழை, வெயில் காலங்களிலும் புயல் வெள்ளக் காலங்களிலும் பாதுகாப்பாகத் தங்கி வாழ ஒரு வீடு என்பது மிகவும் முக்கியம் ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு வேண்டும் என்பதனை, ‘எலிவளை ஆயினும் தனி வளை தேவை’ என நம் நாட்டுப் பழமொழி கூறும்.

இவற்றின் அடிப்படையில்தான் நம்

‘திராவிட மாடல்’ அரசு அனைவருக்கும் தேவைப்படும் அனைத்தையும் நிறைவேற்றி வருகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்னும் ‘திராவிட மாடல்’ அரசின் தத்துவத்தைத் தான் இந்தப் புறநானூற்றுப் பாடல் முழங்குகிறது.

**கலைஞர் கனவு இல்லம்**

எல்லோர்க்கும் உணவு தேவை. உணவுப் பொருள்களை ரேஷன் கடைகளில் இலவசமாக வழங்குகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் நேரடி வருவாய் இல்லாத மகளிருக்கு நேரடியாகவே மாதம் ரூ.1000 தருகிறது. இந்த 1000 ரூபாயைக் கொண்டு தேவையானவைகளை வாங்கிக் கொள் என வழிகாட்டுகிறது திராவிட மாடல் அரசு!

அடுத்து, எல்லோர்க்கும் வீடு வேண்டும் அல்லவா?அதற்காகத்தான் கலைஞர் கனவு இல்லம் திட்டம்!

தமிழ்நாட்டில் உள்ள குடிசைகள் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு எல்லோர்க்கும் கான்கிரீட் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்பது திராவிட மாடல் அரசின் இலக்கு. இதற்காக 2030 ஆம் ஆண்டிற்குள் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது. ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்ள தலா ரூ. 3 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் 2 இலட்சம் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.7,000 கோடி மதிப்பிலான திட்டத்தை அனும தித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இரண்டே ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகளில் 1,79,850 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதி வீடுகள் கட்டப்படுகின்றன. இந்த ஆண்டில் மேலும் 1 இலட்சம் வீடுகள் ரூ. 3500 கோடியில் கட்டப்படும் என அறிவித்துள்ளது திராவிட மாடல் அரசு.

இதில் ஒரு ஒப்பீடு

2016-2021 ஐந்து ஆண்டுகளில் முந்தைய ஆட்சியில் 1 இலட்சம் வீடுகள் தான் கட்டப்பட்டன. ஆனால் 2024-2026 இரண்டே ஆண்டுகளில் 1,79,850 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு, மேலும் 1 இலட்சத்து 20 ஆயிரத்து 150 வீடுகள் கட்டப்படுகின்றன.

**கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் மட்டும் அல்ல!**

இலங்கை தமிழர்களுக்கு ரூ.589 கோடி ஒதுக்கீட்டில் 10,045 நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு 7,469 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் தொடர்ந்து 1 இலட்சத்து 79 ஆயிரத்து 850 வீடுகள் கட்டப்படுகின்றன.

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம்**

ரூ.3,058 கோடியில் 2.63 இலட்சம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. **அடுக்கு மாடி குடியிருப்புகள் திட்டத்தின்கீழ்** ரூ.8,384 கோடியில் 58,211 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு; மேலும் 53,467 வீடுகளின் கட்டுமான பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தத் திட்டத்தில் ஒரு ஒப்பீடு

2016-2021 முந்தைய ஆட்சியில் 27,688 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டன. ஆனால், 2021-2026 திராவிட மாடல் ஆட்சியில் 58,211 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**திராவிட மாடல் அரசு அறிமுகப்படுத்திய அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தில்**

ரூ.482 கோடி மதிப்பீட்டில் 5281 உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டாக்கள்**

2021-2026 திராவிட மாடல் ஆட்சியில் 23.56 இலட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

**பழங்குடியினர் நலம் நாடும் தொல்குடி திட்டத்தில்**

ரூ. 221 கோடி மதிப்பீட்டில் 7,674 பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**ஒற்றைச் சாளர முறை திட்டத்தின்கீழ்**

24,446 மனைப்பிரிவு விண்ணப்பங்களுக்கும், 2002 கட்டட அனுமதி விண்ணப்பங்களுக்கு ‘திராவிட மாடல்’ அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஆகமொத்தம், ‘திராவிட மாடல்’ அரசு 2021 முதல் ஐந்து ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் ஏழைகளுக்காக 4,29,394 வீடுகளைக் கட்டியுள்ளது. ரூ.482 கோடியில் ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளில் 5,281 கட்டமைப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 23.56 இலட்சம் ஏழைகளின் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி எல்லாருக்கும் எல்லாம் என்னும் தத்துவத்தின்படி ‘திராவிட மாடல்’ அரசு ஏழை எளிய நலிந்த சமுதாய மக்களின் அடிப்படைத் தேவைகளை எல்லாம் படிப்படியாக நிறைவேற்றி தமிழ்நாட்டிற்குப் பெருமைகளைச் சேர்க்கிறது!

---

## மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

# 143.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 3 திட்டப்பணிகளைத் திறந்து வைத்து - ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்!





சென்னை, மார்ச் 10 -

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.3.2026) மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட வளசரவாக்கம் எஸ்.வி.எஸ் நகர் முதல் பிரதான சாலையில் மீட்டெடுக்கப்பட்ட குளத்தை 4.88 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு செய்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு நடைபாதை பூங்கா”வை திறந்து வைத்து பார்வையிட்டார்.**

தொடர்ந்து மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட சின்ன போரூர் மருத்துவமனை சாலையில் 2.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய நவீன கலைஞர் நூற்றாண்டு நூலக கட்டடம் மற்றும் மகளிர் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்து பார்வையிட்டு, வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும் மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்ன நொளம்பூரில் பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலைகளை இணைக்கும் வகையில் 135.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 245 மீட்டர் நீளத்தில் நான்கு வழி பாதையுடன் கட்டப்பட்ட புதிய பாலத்தை திறந்து வைத்து, நடந்து சென்று பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நொளம்பூரில் கூவம் ஆற்றங்கரையில் ஓம்சக்தி நகர் புதிய பாலம் முதல் நொளம்பூர் யூனியன் சாலை மயானபூமி வரையிலான 890 மீட்டர் நீளத்திற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி மற்றும் அடையாளம்பட்டு சர்வீஸ் சாலை முதல் நொளம்பூர் சாணக்கிய பிரதான சாலை சந்திப்பு வரையிலான 1,200 மீட்டர் நீளத்திற்கு சாலை அகலப்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**எஸ்.வி.எஸ். நகர் முதல் பிரதான சாலையில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா மற்றும் குளம்**

வளசரவாக்கம் எஸ்.வி.எஸ். நகர் முதல் பிரதான சாலையில் 4.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16,396.13 சதுர மீட்டர் பரப்பளவில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா மற்றும் குளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்கா எஸ்.வி.எஸ். நகர் முதல் பிரதான சாலை மற்றும் அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 11,454.03 சதுர மீட்டர் நீர் பரப்பளவுடன், குளத்தின் மையப் பகுதியில் பறவைகள் தீவு, நடைபாதை, கூழாங்கற்கள் மற்றும் கரடு முரடான தரைத்தளத்தை கொண்ட ரிஃப்ளெக் சாலஜி நடைபாதை, உள்ளூர் வகை மரங்கள், செடிகள் மற்றும் புல்வெளிகளுடன் பசுமைப் பரப்பு, வெளிப்புற உடற்பயிற்சிக் கூடம், சிறிய கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு திறந்தவெளி திரையரங்கம், ஓய்வெடுப்பதற்காக சிறிய நிழற்குடை, பாலம், சுற்றுச்சுவர், வாகன நிறுத்துமிடம், நுழைவாயில், படகு சவாரி தளம், இருக்கைகள், கழிப்பறை வசதிகள், மின்விளக்கு வசதிகள், கண்காணிப்புக் கேமராக்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், பராமரிப்பாளர் மற்றும் பாதுகாவலர் அறை உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

**சின்ன போரூர் மருத்துவமனை சாலை - கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்**

சின்ன போரூர் மருத்துவமனை சாலையில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், 2.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம் கட்டப்பட்டுள்ளது. இந்த நூலகம் 6,160 சதுர அடி பரப்பளவில் தரைத்தளத்தில் நூலகம், முதல் தளத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் வாகன நிறுத்துமிடம், நுழைவு வாயில், கழிப்பறை, பராமரிப்பாளர் அறை மற்றும் பாதுகாப்பு காவலர் அறை, நூலகம் உள்ளடக்கிய வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

முதல் தளத்தில் 863 சதுர அடி பரப்பளவில் அழகு பயிற்சி மையம், 1,100 சதுர அடி பரப்பளவில் தையல் பயிற்சி மையம், இருசக்கர வாகன நிறுத்துமிடம், கார் நிறுத்துமிடம், குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, கண்காணிப்புக் கேமராக்கள், கழிவறை வசதிகள் உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகம் மூலம் போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள், குடிமைப் பணிக்கு தயாராகும் மாணவர்கள், முதியவர் மற்றும் அனைத்து வயதினரும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலைகளை இணைக்கும் வகையில் 135.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 245 மீட்டர் நீளத்தில் நான்கு வழி பாதையுடன் கட்டப்பட்ட புதிய பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் மதுரவாயல், நொளம்பூர் மற்றும் முகப்பேர் பகுதிகளில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள். மேலும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும்.

இந்நிகழ்ச்சிகளில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி, ஏ. எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள் திருமதி க.ஹேமலதா, திருமதி. ச.பாரதி, திருமதி மா.ரமணி, ஏ. ஸ்டாலின், ச.சங்கர் கணேஷ், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---



இனமானப் பேராசிரியர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது. நிகழ்வில் தச்சை தெற்கு பகுதி பொறுப்பாளர் சுப்பிரமணியன், கழக நிர்வாகிகள் சிந்து முருகன், சிவா, காந்தி, ஷெட்டி, வினோத் குமார் முறுக்கு கடை கணேசன், சங்கர் கணேஷ், செல்வி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



கடலூர் மேற்கு மாவட்டம்,பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மூன்றாம் கட்டமாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா , 6.3.2026 அன்று கௌரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்ற தலைவர் , நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன், 22 வது வார்டு , காமராஜர் தெருவில் 500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஆர்.ராஜா, ஆர்.கே. ராமலிங்கம், கௌரி அன்பழகன், சண்முகவள்ளி பழனி, லோகநாதன், ஜாகிர் உசேன், வழக்கறிஞர் நாராயணன், சம்பத், செல்வகுமார், தயாளன், முருகன் , அருள், சங்கர், சேகர், சரவணன், பாலச்சந்தர், ராஜா, ராஜ் முஹம்மது, எழில், மோகன், பிரபு கணேஷ்,சீனு, மோகன், மணி வண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .